# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1950/26 - 2016 ජනවාරි මස 19 වැනි අඟහරුවාදා - 2016.01.19

1950/26 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: பீஎல்டீஎச்/எல்என்டீ/7/1/6/113.

காணி அமைச்சின் இல.: 4-3/5/2013/டபிளியூஎச்/689.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணிகளின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் ஹெலஉட பத்துவ மெதகோரளை சிறு பிரிவில் பிரிவு இல. 256 சீ தும்பகொட்ட கிராம அலுவலர் பிரிவில் பல்லெவெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத் தினால் தயாரிக்கப்பட்ட காணி வரைபட இல. 620086 தொகுதி 05 இன் 05 ஆம் தொகுதியின் பத்திரிகை இல. 11 வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 0.0133 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு மற்றும் எல்லெவத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத் தினால் தயாரிக்கப்பட்ட காணி வரைபட இல. 620087 தொகுதி 03 இன் 01 ஆம் தொகுதியின் பத்திரிகை இல. 04 வரைப்படத்தில் குறிப்பிடப்பட்ட 0.0034 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு.

இல.: 620086 தொகுதி 05 இன் 05 ஆம் தொகுதி

1. துண்டு இல.: 209
காணியின் பெயர்: பெங்கியவத்தை அல்லது பங்கவத்தை; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0018 ஹெக்டயார்.

2. துண்டு இல. 210
காணியின் பெயர்: பெங்கியவத்தை அல்லது பங்கவத்தை; உரிமை கோருபவர்: அரசு, பீ. சீ. விமலாவதீ, பெங்கியவத்தை, தும்பகொடை, பலாங்கொடை; விஸ்தீரணம்: 0.0115 ஹெக்டயார்.

இல.: 620087 தொகுதி 03 இன் 01 ஆம் தொகுதி

3. துண்டு இல. 65
காணியின் பெயர்: பெங்கியவத்தை; உரிமை கோருபவர்: அரசு, பீ. எம். நன்தாவதீ, பெங்கியவத்தை, தும்பகொடை, பலாங்கொடை; விஸ்தீரணம்: 0.0034 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலாங்கொடை பிரதேச செயகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

சம்பிக நிரோஸ் தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2016, நவெம்பர் 18.

2 - 100


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.